1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் என்று சொல்லுகிறபோது பொது நிதியிலிருந்து செய்யப்படுகிற திட்டமாகும். ஆகவே கிராமங்களில் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்பது மத்திய அரசாங்கம் 50 சதவீதம், மாநில அரசாங்கம் 50 சதவீதம் என்ற முறையில் செய்யப்படுகிறது. அந்தத் திட்டத்தில் ஒரு சில நிலைகளில் அங்கே வேலைகள் பாக்கி இருக்கலாம். நான் இல்லையென்று சொல்லவில்லை. அந்த வேலைகள் எங்கெங்கே பாக்கி இருக்கிறதோ அவைகளை மீண்டும் எடுத்துச் செய்யவேண்டுமென்ற முறையில் அவைகள் செய்யப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்து கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பால்மாடுகள் வாங்க வழங்கப்படும் கடன் மற்றும் மானியத் தொகை.

488 (*வினா எண் 21119) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : திரு. க. வெ. வீரானம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பால்மாடுகள் வாங்க வழங்கப்படும் கடன் மற்றும் மானியத் தொகை, மதுரை மாவட்டத்தில் முதல் பால்மாட்டிற்கு வழங்குவதில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதைத் தளர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) முதல் கறவை மாடுகள் வழங்குதலுக்கு இருந்த தடையைத் தளர்த்தி 1983-84ஆம் ஆண்டுக்கான கூடுதல் திட்டம் முதல் கறவை மாடுகள் வழங்க தயாரித்து அனுப்பும்படி மதுரை மாவட்ட வளர்ச்சி முகமை அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். ஆகவே முதல் கறவை மாடுகள் வழங்கப்படுகிற திட்டத்தை இந்த ஆண்டிலும் செயல்முறைப்படுத்தப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பால் மாடுகள் வழங்குகிறபோது பால் உற்பத்தியாளர் சங்கங்கள் மூலமாக வழங்குகிறார்கள். மதுரை மாவட்டத்தில் முதல் பால் மாட்டிற்கு கடன் கொடுப்பது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மீண்டும் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுக்கிறபோது

இயங்கிக் கொண்டிருக்கிற பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்குத் தான் கொடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. புதியதாக பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு முதல் பால் மாடு பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் போகிறது. ஆகவே கொடுக் கப்படுகிற முதல் பால்மாடு மானியத்தை முழுக்க முழுக்க புதிய தாக துவங்கப்படுகிற பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, அது பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பால் மாடுகள் வாங்குவதற்குக் கொடுக்கப்பட்ட கடன் சென்ற ஆண்டு ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக அவர்களால் திருப்பி கொடுக்க முடியாமல் இருக்கிறது. மீண்டும் அபிவிருத்தி செய்ய புதிய லோனும் வாங்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, சென்ற ஆண்டிலே பால் மாடுகள் வாங்குவதற்காக வழங்கப்பட்ட கடன் களை ரத்து செய்துவிட்டு, புதியதாக அவர்களுக்கு கடன் கொடுப் பதற்கு அரசு முயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர்கள் எப் போதுமே ரத்து செய்வதைப்பற்றித் தான் அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டம் மத்திய அரசினுடைய திட்டம்; ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம். இதிலே விவசாயிகளாக இருக்கிறவர்களுக்கு, விவசாயக் கூலிகளாக இருக்கிறவர்களுக்கு, தினக்கூலிகளாக வேலை செய்கின்றவர்களுக்கு, மானிய அடிப்படையில்தான் இந்தக் கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அதில் மூன்றில் ஒருபாகம் மானியம். அதுவும் ஆதி திராவிடர்களாக இருந்தால் 50 சத வீதம் மானியம். அப்படித்தான் கொடுக்கப்படுகிறது. சுலபத் தவணைகளில் இந்தக் கடன்கள் கொடுக்க வேண்டுமென்று விதி முறைகள் இருக்கின்றன. ஆகவே, ரத்து செய்ய வேண்டுமென்று சொல்வது சரியாக இருக்காது. வறட்சி, வெள்ளம், புயல் போன்ற இயற்கை உபாதைகள் ஒவ்வொரு ஆண்டும் வந்து கொண்டு தான் இருக்கின்றன. அதற்காகத்தான் இந்தத் திட் டங்களை எல்லாம் நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக் கிறோம். இந்தக் கடன்களை ரத்து செய்ய முடியாது. அப்படியே ரத்து செய்வதென்றாலும் மத்திய அரசாங்கம்தான் செய்ய வேண்டும். மாநில அரசாங்கம் இதில் ஒன்றும் செய்ய இயலாது.

1984 மார்ச் 28]

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்மாடு வாங்குவதற்கான மானியத் தொகைகளை ஊராட்சி ஒன்றியங்கள் உடனடியாகக் கொடுத்து விடுகின்றன. ஆனால் அந்தக் கடன் தொகையை வழங்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் கால தாமதம் செய்கின்றன. ஆகவே, முழுத் தொகையையும் ஊராட்சி ஒன்றியமே பெற்று விவசாயிகளுக்கு வழங்க அரசு முன் வருமா ?

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையில் இப்போது செய்ய முடியாது. காரணம் மத்திய அரசாங்கம் சில விதிமுறைகளை வைத்து இருக்கிறது. அவற்றின் அடிப்படையில்தான் சப்சிடி அல்லது மானியம் கொடுத்து வருகிறோம். அதுமட்டுமல்ல. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருப்பவர்கள் கடன் பெறுபவர்கள் விவசாயக் கூலியாக இருப்பார்களானால் செக்யூரிட்டி பர்னிஷ் செய்யவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்கு சில விதிமுறைகளை வைத்து இருக்கிறார்கள். ஆகவேதான், இப்படிப்பட்ட ஏழைமக்களுக்கு செக்யூரிட்டி இல்லாமல் கடன் கொடுக்க வேண்டும் என்று சொல்லி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மத்திய அரசின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால்தான் ஏழை எளிய மக்கள் வளம் பெறமுடியும். வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். ஆகவே, அப்படிப்பட்ட நிலையை இந்த அரசு சண்டிப்பாக எடுக்கும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய மானியத் தொகையை சிலர் தவறாகச், செலவழிக்கிறார்கள், பயன்படுத்திக்கொள்கிறார்கள். குறிப்பாக ஏழை அரிசனங்களிடத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, அதிகமான அளவிற்கு மாடுகள் வாங்க கொடுக்கக் கூடிய கடன்தொகையை சிலர் பெற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. அப்படி ஏதேனும் புகார்கள் அரசுக்கு வந்துள்ளதா ? ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் அரசின் கவனத்திற்கு வரவில்லை. அப்படி எங்கேயாவது நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டு புகார் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் சுப்பிரமணியம் போன்றவர்கள் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும். அப்படி தெரிவிக்கப்பட்டால், அப்படிப்பட்ட முறையில் கையெழுத்து வாங்கி ஏழை எளிய மக்களுக்கு அந்தக் கடன் போய் சேராத அளவிற்குச் செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல பிரயோசனமான திட்டம். இந்தத் திட்டத்தின்கீழ் குறைந்த வருமானம் உள்ள விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு பயன்தரக்கூடிய வகையில் ரூ. 1,000 மானியம், கடன் கொடுக்கப்படுகிறது என்று அறிகிறேன். ஆனால், இதிலே ஒரு சங்கடம் என்ன இருக்கிறது என்று சொன்னால், கிராம நல ஊழியர்கள், வங்கியின் அதிகாரிகள், வெட்னரி டாக்டர்கள் போன்றவர்களிடத்தில் அவர்கள் சான்றிதழ் பெற்று வந்தால்தான் கடன் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இதனால், அந்தந்த அதிகாரிகளைச் சென்று பார்த்து வருவதற்கே ஏகப்பட்ட செலவு ஆகிவிடுவதால் இந்த வழிமுறையை மாற்றி அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அதிகபட்ச மானியமாக ரூ. 3,000 கொடுக்கலாம். மானியத் தொகை ரூ. 3,000 என்று கொடுக்கிறபோது, கடன் தொகை ரூ. 9,000 வரையில் கூட கொடுக்கலாம். அப்படிப்பட்ட நிலை இப்போது நடைமுறையில் இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி சொன்னதுபோல், இதுபோன்ற விதிமுறைகள் இல்லாவிட்டால் ஊழலுக்கு வழி வகுத்ததாக அமைந்து விடுமோ என்பதால்தான் சில விதிமுறைகளை வைத்துத்தான் அரசாங்கம் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். ஆகவே, அந்த விதிமுறைகளை மாற்றுவதற்கான யோசனை இந்த அரசுக்கு இல்லை.

திரு. க. பாரமலை : தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில், முதல் கறவை மாடுகள் வழங்க இருந்த தடையைத் தளர்த்தி, 1983-84ஆம் ஆண்டுக்கான கூடுதல் திட்டத்தில் முதல் கறவை மாடுகள் வழங்க அறிக்கை தயாரித்து அனுப்பும்படி மதுரை மாவட்ட வளர்ச்சி அலுவலரைக் கேட்டுக்கொண்டுள்ளதாகச் சொன்னார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் முதல் பிளானிலும் கொடுக்கவில்லை. இப்போது அடிஷனல் பிளானில் சேர்த்து அனுப்பும்படி கேட்கப்படவில்லை என்று பிராஜக்ட் ஆபீசர் சொல்கிறார். ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் இத்திட்டம் பொருந்தும்படி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மதுரை மாவட்டத்தைப் பொறுத்தது. இருப்பினும் மாண்புமிகு உறுப்பினரின் கேள்வியும் கவனத்தில் கொள்ளப்பட்டு உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, இந்த கறவை மாட்டிற்கு மானியம் வழங்கிறபோது, ஊராட்சி ஒன்றியத்தில் கேட்டால் வங்கியில் இருந்து கடன் பெற்று வாருங்கள், தருகிறேன் என்று டி. ஆர். அவர்கள் சொல்வதாகவும், வங்கிகளிடத்தில் கேட்டால், மானியம் பெற்று வாருங்கள் தருகிறோம் என்று சொல்வதாகவும், அதன் காரணமாக விவசாயிகளுக்கு இந்த மானியம், கடன் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே இதை ஒரு வரைமுறைப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, இதுபோன்ற நிலைமைகள் ஒரு சில இடங்களில் இருந்து வருகின்றன, இல்லை என்று சொல்லவில்லை. ஆகவே, ஒன்றிய அலுவலர்கள் நேரடியாக கண்காணித்து அந்தக் கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். ஆகவே, எல்லாக் கடன்களும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதில் மிகுந்த கவனத்தையும், எச்சரிக்கையும் நாம் எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அந்தக் கடனைப் பெறுகின்றவர்களுக்கு, பிற்பட்ட வகுப்பினருக்கு 1/3 பகுதி மானியம் என்றும் அரிசனங்களுக்கு பாதி, அதாவது 50 சத வீதம் மானியம் என்றும் தெரிவித்தார்கள். அந்த மானியத் தொகையை வங்கியினர் அரசாங்கத்திலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அந்த மானியத் தொகையைப் பயன்படுத்தும் அளவுக்கு வங்கிகள் சரியாகக் கடன் கொடுப்பதில்லை. அப்படி கொடுக்கவில்லை என்று தெரிந்தால் அல்லது புகார் வந்தால் அந்த வங்கி அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, கொடுக்காததற்கான காரணங்களைக் கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்தக் கடன்களை எல்லாம் கொடுப்பது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்தான். ஆகவே, அந்த வங்கிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றாலும் கூட மாநில அரசு நேரடியாக நடவடிக்கை எடுக்க முடியாது. மத்திய அரசின் உதவியோடுதான் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே

தான் இந்த நிலைமைகளை எல்லாம் ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். குறிப்பாக மானியத் தொகை எல்லாம் ஒழுங்காக ஏழை எளிய மக்களுக்கு, அரிசன மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே 600 குடும்பங்களுக்கு ஓராண்டில் கொடுக்க வேண்டுமென்று விதிமுறை வைத்திருக்கிறோம். 600 குடும்பங்கள் என்ற அந்த இலக்கினை நாம் கண்டிப்பாக எட்டியாக வேண்டும். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இந்த குறிப்பிட்ட இலக்கினை நாம் ஏற்கெனவே எட்டியுள்ளோம். இந்தியாவிலேயே இந்தத் திட்டத்தை நல்லமுறையில் செயல்படுத்தி, முதன்மை ஸ்தானத்தைப் பெற்றிருப்பது நம்முடைய தமிழ்நாடுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களை முழுநேர எழுத்தர்களாக நியமிக்கும் திட்டம்.

489 —(*வினா எண். 21479) திரு. செ. செம்மலை, திரு. ஜி. கிருஷ்ணராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஊராட்சிப் பகுதிநேர எழுத்தர்களை, முழுநேர நிரந்தர எழுத்தர்களாக நியமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகள் கேட்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அவர்களது பரிந்துரைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) ஊராட்சி பகுதிநேர எழுத்தர்களை முழுநேர நிரந்தர எழுத்தர்களாக நியமிப்பது பற்றி அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளைக் கேட்கவில்லை. ஆனால், இப்பொருள் பற்றிய செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை : தலைவரவர்களே, இப்படிப்பட்ட கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். ஊராட்சி பகுதிநேர ஊழியர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சிபாரிசு செய்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அரசின் பரிசீலனையில் இருக்கிற கருத்துருவை விரைவாகச் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS